தமிழ்மணம்
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
PEER REVIEWED
Tamilmanam International Research Journal of Tamil Studies
E-ISSN: 3049-0723 & P-ISSN: 3107-7781
Volume 7, Number 1, January 2026

# Natrinai: "Men of Steadfast Words and Enduring Sweetness" – A Content Overview

**K. Nalamaharajan*,**
*Full Time Phd Scholar, Center for Bharathidasan Studies, Bharathidasan University, Tiruchirappalli-24.*
*EMail: nalanala1994maya@Gmail.com, Ph. No: 8870316589.*
**Dr. A. Govindarajan**,**
*Associate Professor, Center for Bharathidasan Studies, Bharathidasan University, Tiruchirappalli-24.*
*Email: govindarajan.a@bdu.ac.in, Ph No:9445293534.*

**Corresponding Author** * nalanala1994maya@Gmail.com

**ARTICLE INFO**
*Article history:*
Received
December 13, 2025
Revised
December 15, 2025
Accepted
December 20, 2025

**ABSTRACT**

Natrinai is a form of Ancient literature and romantic poetry. This book has been written by 175 poets. The name of the compiler of this work is unknown. It was commissioned by PANNADU THANDHA MARAN VAZHUTHI. When preparing a dictionary for the Sangam literature, various rules must be followed. Indexing is one such rule. Contemporary studies have produced research on concordances, word indexes, content indexes. When undertaking dictionary work for classical literature. One must first analyze the traditional verses. The meaning centered theme, word meaning, grammatical notes and the context in which the verses are composed must be analyzed with unde4r standing every word is meaningful. In the case of Sangam literature, many words are difficult to understand directly. Tholkappiyam is helpful in analyzing the nuances of the verses. Accordingly, this research paper is based solely on the first poem of the Natrinai anthology, a Kurinji- Themed poem that begins with the lines "Nindra sillar needu thondriniya".

**Key words**: *Natrinai, Tolkappiyam, Sollathigaram, Vinaiyiyal, Porulathigaram, Pnnathur Narayayasami Iyyar, Nachinarkkiyar, thirukkural*

Journal Homepage: https://tamilmanam.in/journal/
This is an open access article under the License Creative Commons Attribution 4.0 International License
http://Creativecommons.org//license/by/4.0/

# நற்றிணை, நின்ற சொல்லர் நீடு தோன்றி னியர் – உள்ளடக்கப் பார்வை

***கா.நளமகராஜன்,** முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், பாரதிதாசன் உயராய்வு மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம்,திருச்சிராப்பள்ளி-24.

****முனைவர் அ.கோவிந்தராஜன்**, இணைப்பேராசிரியர், நெறியாளர், பாரதிதாசன் உயராய்வு மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-24.

**சுருக்கம் (Abstract)**

தமிழ் இலக்கிய வகைகளுள் மூத்த வகையும் முத்தான வகைமை இலக்கியமாக முன் நிற்பது சங்க இலக்கியம் ஆகும். அவ்வகைகள் இமைந்திருக்கின்ற நூல்களுள் ஒன்று நற்றிணையாகும். இந்நூலை 175 புலவர்கள் பாடியுள்ளனர். இந்நூலைத் தொகுத்தவர் பெயர் தெரியவில்லை; தொகுப்பித்தவன் பன்னாடு தந்த மாறன் வழுதி. சங்க இலக்கியங்களுக்கான அகராதியைத் தயாரிக்கும் போது பல்வேறு விதிமுறைகளை பின்பற்ற வேண்டியுள்ளது. அவ்வகையில் அடைவும் ஒன்றாகும். தற்கால ஆய்வுகளில் தொடரடைவுஇ சொல்லடைவுஇ உள்ளடக்க அடைவுகள் போன்ற ஆய்வுகள் வெளிவந்துள்ளன. செவ்வியல் நூல்களுக்கான அகராதிப் பணிகளை மேற்கொள்ளும் பொழுது முதலில் மரபு வழிப்பட்ட ஒரு

பாடலை விதி முறைகளோடு பிரித்தறிய வேண்டும். பாடலின் பொருள்இ மையக்கருத்துஇ சொற்பொருள் விளக்கம்இ இலக்கணக்குறிப்புஇ பாடல் அமைக்கப்பட்டுள்ள சூழல் முதலியவற்றைப் பிரித்தறிந்து பொருள் கொள்ள வேண்டும். எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே என்ற நோக்கிலேயே சொற்களைப் பிரித்தறிய வேண்டும். செவ்வியல் இலக்கியங்களைப் பொறுத்தவரையில் நேரடியாக பொருள் விளங்காத கடினச் சொல்லாகவே விளங்குகின்றது. பாடலின் நுணுக்கங்களை ஆராய தொல்காப்பியம் உதவிப்புரிகின்றது. அவ்வகையில் நற்றிணையில் முதல் பாடாலன "நின்ற சொலலர் நீடு தோன் றினியர்" எனத் தொடங்கும் பாடலில் இடம் பெற்றுள்ள நுட்பங்கள் குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** *நற்றிணைஇ தொல்காப்பியம்இ சொல்லதிகாரம்இ வினையியல்இ பொருளதிகாரம், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், நச்சினார்க்கினியார், திருக்குறள்*.

**முன்னுரை**

சங்க இலக்கியங்களாக போற்றப்படுபவை பாட்டும் தொகையும் ஆகும். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று நற்றிணையாகும். இந்நூல் அகப்பொருளைச் சார்ந்ததாகும். ஒன்பது முதல் பன்னிரண்டு அடி வரையறையை பெற்று அமைந்துள்ளது. நல் என்னும் அடைமொழியைப் பெற்ற நூல் நற்றிணையாகும். இந்நூலைத் தொகுப்பித்தவன் பன்னாடுதந்த மாறன் வழுதி ஆவான். தொகுத்தவர் பெயர் தெரியவில்லை. நற்றிணையை 175 புலவர்கள் பாடியுள்ளனர். திணையின் பெயராலேயே அமைந்த சிறப்பு இந்நூலுக்கு உண்டு. நற்றிணையின் முதல் பாடலாக அமைவது நின்றசொல்லர் நீதோன்றினியர் என்னும் கபிலர் பாடிய குறிஞ்சித் திணைப் பாடலாகும். இப்பாடலில் நிறைய நுட்பங்கள் காணக்கடுகின்றன. அந்நுட்பக் கூறுகளைப் பாகுபடுத்திக் கண்டறிந்து விளக்குவதாகவே இக்கட்டுரை அமைகிறது.

**பாடல்**

**நின்ற சொல்லர் நீடு தோன்றினியர்**
**ஏன்றும் என்றோள் பிரிபறியலரே**
**தூமரைத் தண்டா தூதி மீசைச்**
**சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்**
**புரைய மன்ற புரையோர் கேண்மை**
**நீரின் றமையா வுலகம் போலத்**
**தம்மின் றமையா நயந்தருளி**
**நறுநுதல் பசத்த லஞ்சிச்**
**சிறும உறுபவோ செய்பறியலரே. (நற்.1)**

**பாடல் விளக்கம்**

மரபு வழிப்பட்ட செய்யுள்களுக்கு உரைக் காண்பது தொன்றுதொட்டு வழங்கிவரும் வழக்கம் ஆகும். அவ்வகையிலே பல உரையாசிரியர்கள் தோன்றியுள்ளனர். தொல்காப்பியர் காண்டிகைஇ விருத்தி என இரு உரைகளைச் சுட்டுகிறார். உரையானது மரபுச் செய்யுளின் கடினத்தன்மையுள்ள செய்தியை எளிதில் புலப்படுமாறு வரைவது ஆகும். அவ்வகையில் மேற்கண்ட பாடலானது தோழீ! நம் காதலர் மிக உயர்ந்த குணநலன்களை உடையவர். அது எவ்வாறாயின் வாய்மைத் தவறாதவர்; என் மனதிற்கு நெடிதாக தோன்றும் இனிமையானவர்; என் தோள்களைப் பிரிவதை அவர் என்றும் விரும்பாதவர் எனக் கூறி; தலைமக்களது காதலானது குளிர்ச்சியான நீரில் இருக்கும் தாமரை மலரின்

தாதினையும் சந்தன மரத்தின் தாதினையும் ஊதி சந்தன மரத்தில் இருக்கும் உயர்ந்த தேன் போன்றது. ஆதலால் தலைவன் நீரின்றி அமையாத உலகம் போலத் தன்னை இன்றி வாழ முடியதாவாறு விருப்பு வைத்தவர். அவ்வாறு களவொழுக்கத்தில் இருந்து விட்டு இக்கற்பொழுக்கத்தில் தம்மை விட்டுப் பிரிந்தால் எனது மணம் பொருந்திய நெற்றி பசலையுற்று வாடும் என்பதை அறிந்து பிரிய எண்ணிய அவரது மனம் தடுமாறும் என தலைவி தோழியிடம் மொழிகிறாள் என்ற செய்தியை கொண்டுள்ளது.

**உள்ளடக்கம்**

சங்கப்பாடல்கள் பல செய்திகளைக் கூறினாலும் பாடலின் மையக்கருத்து ஒன்றேயாகும். அம் மையக்கருத்தைச் சூழ்ந்தே பிற கருத்துகளும் அமைகின்றன. மேற்கண்ட பாடலுக்குப் பல உரையாசிரியர்கள் உரை வரைந்துள்ளனர். ஒவ்வொரு உரையும் தனித்துவமாக மிளிரக் கூடியவை. ஆனால் பாடலின் மையக் கருத்தானது

> **‘தோழி! நம் காதலர் நிலைமைத் தவறாத வாய்மை உடையவர்; என்னை பிரிவதை விரும்பமாட்டார்; என்னைப் பிரிந்தால் நான் பசலை நோயால் துன்புறுவேன்; ஆதலால் என்னைப் பிரிவதை அவர் விரும்ப மாட்டார் என தோழியிடம் தலைவி கூறுகிறாள்’.**

என்பதாகும். அப்பாடல் தலைவனைப் பற்றிய பாடலாகும். ஆதலால் தலைவனது செயல்களை தலைவி சிறப்பித்துக் கூறுவதாக அமைக்கப்பட்டுள்ளது.

**பாடலின் சூழலமைவு**

சங்கப்பாடல்கள் யாவும் சூழலின் பின்னணியிலேயே பாடப்பட்டுள்ளன. கைக்கோள்களான களவிற்கும் கற்பிற்கும் கிளவிகள் தனித்தனியே வகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் களவிற்குரிய கிளவிகளாக

> **“இயற்கைப் புணர்ச்சி வன்புறை தெளிவே**
> **பிரிவுழி மகிழ்ச்சி பிரிவுழிக் கலங்கல்**
> **இடந்தலைப்பாடு பாங்கற் கூட்டம்**
> **பாங்கிமதி யுடம்பாடு பாங்கியிற் கூட்டம்**
> **பாங்கமை பகற்குரி ……………….**
> **……………………………………… “(தொல்.பொரு.கள.7)**

முதலிய பதினேழு கிளவிகளைத் தொல்காப்பியர் கூறுகிறார். அவற்றில் ‘இயற்கைப்புணர்ச்சியும் ஒன்றாகும்’. இப்பாடலானது கற்புக்காலத்தில் தலைவி கூற்று நிகழ்த்துவதாக அமைக்கப்பட்டுள்ளது. களவு காலத்தில் இயற்கைப்புணர்ச்சியின் இறுதியில் உன்னைப்பிரிய மாட்டேன் என்று தலைவன் தலைவியிடம் உறுதியளித்தான். ஆனால் கற்பொழுக்கத்தில் தலைவியைப் பிரிகிறான். இதை அறிந்த தோழி தலைவியிடம் கூறுகிறாள். ஆனால் தலைவியோ மனம் ஏலாதவளாக என்றோ ஒருநாள் (களவொழுக்கத்தில்) தன்னை பிரிய மட்டேன் என உறுதியளித்தான் தலைவன். அவ்வாறு பிரிந்தால் நான் பசலை நோயுற்று வாடுவேன்; இதனால் தலைவனது மனம் என்னை பிரிவதிலிருந்து தடுமாறும் என தலைவி தோழியிடம் கூறுவதாக இப்பாடல் அமைக்கப்பட்டுள்ளது.

**பாடல் அமைப்பு முறை**

சங்க அகப்பாடல்களுக்கு கூற்றுகளே முதன்மையானவை. களவுஇ கற்பு ஆகிய இரு கைக்கோள்களிலும் கூற்று நிகழ்த்துவோர் பற்றி தொல்காப்பியத்தில் விளக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பாடல் கற்புக் கால்திதில் தலைவனது பிரிவை தலைவிக்கு தோழி உணர்த்துகிறாள். அதைக் கேட்ட தலைவி தலைவனைப் பற்றி தோழிக்கு கூறுகிறாள். இப்பாடல் தலைவனது சிறப்பை மட்டுமே

உணர்துகிறது. தலைவனின் சிறப்பை தலைவி மொழியும் விதமாக பாடல் அமைக்கப்பட்டுள்ளது. முதலில் தலைவனின் நற்பண்புகள் சிறப்பிக்கப்படுகின்றன. தலைவன் தவறாத வாய்மையை உடையவர்; மனத்திற்கு நெடிது தோன்றும் இனிமையானவர்; என் தோள் பிரிவதை என்றும் அறியாதவர் என்பதை

**"நின்ற சொல்லர் நீடுதோன்றி னியர்**
**ஏன்றும் என்றோள் பிரிபறியலரே" (நற்.1)**

என தலைவி கூறுகிறாள். இறுதியில் இந்நற்பண்புகளைத் தன்னகத்தே கொண்ட தலைவன் தன்னை பிரிவானேயானல் நான் பசலைநோயுற்று அவதியுறுவேன் என்பதை

**"நறுநுதல் பசத்த லஞ்சித்**
**சிறுமை உறுபவோ செய்பறி யலரே" (நற்.1)**

எனக் கூறுகிறாள். ஆதலால் தலைவன் என்னை விட்டு பிரியக் கருதமாட்டான் என்பது தலைவியின் கருத்தாக உள்ளது.

**உவமை**

ஒரு வாக்கியத்தில் கூற வரும் செய்தியை நேரடியாக கூறாமல் அச்செய்தியை மிகுதிப்படுத்திக் கூறுவதற்காக பிற பொருளோடு ஒப்புமைப்படுத்திக் கூறுவது உவமையாகும். உவமையைப் பற்றி கூறவந்த தொல் காப்பியர் அவற்றின் வகைகளை

**"வினை பயன் மெய் உரு என்ற நான்கே**
**வகை பெற வந்த உவமைத் தோற்றம்" (தொல்.வினை.2)**

என சுட்டுகிறார். மேலும் உவம உருவுகள் முப்பத்தி ஆறு எனவும் கூறுகிறார். மேற்கண்ட நற்றிணைப் பாடலில் இரண்டு உவமைகள் இடம் பெற்றுள்ளன. தாமரைத் தாதுஇ சந்தனத் தாதுஇ தேன் ஆகியவை உவமைப் பொருளாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

**"தாமரைத் தண்டாதூதி மீமிசைச்**
**சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்" (நற்.1)**

என்றும் அடிகளில் தாமரையின் தாது தலைவனுள்ளமாகவும் சந்தனமரத்தின் தாது தலைவியின் உள்ளமாகவும் இவர்களது மனம் ஒத்தக் காதல் தேனாகவும் உவமிக்கப்பட்டுள்ளது. "தாமரைத் தாது தலைவனுள்ளத்திற்கும் சந்தனத்தாது தலைவியுள்ளத்திற்கும் உவமையாக்கி அருவருட்கருத்தும் ஒத்தவழி சாந்திலே தீந்தேனிறால் வைத்தது போலத் தலைவன் தலைவிபால் அன்புவைத்தானெனப் பொருந்தவுரைக்க" எனப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் கூறுகிறார். மேலும் தன்பால் வைக்கப்பட்ட தாமரைத்தேனைச் சாந்தம் தன் மணத்தை ஊட்டிச் சிறப்பிப்பது போலத் தன்பால் வைத்த என் அன்புஇ புரை உயர்ந்தாற்போலஇ அவன்பால் வைத்த என் அன்புஇ புரையோனாதலின் கேண்மைப்பெற்று உயர்ந்தது என்றற்குத் தீந்தேன்போலப் புரைய மன்ற எனப்பட்டது". என ஔவை துரைசாமிப்பிள்ளை கூறுகிறார். மற்றொரு உவமையானது தலைவியின் மீதுள்ள தலைவனின் விருப்பத்தைக் குறிக்க புலவர் பயன்படுத்தியுள்ளார்.

**"நீரின்றமையா வுலகம் போலத்" (நற்.1)**

இவ்வுவமையை. துலைவன தலைவியை விட்டுப் பிரிய விரும்பாதவன் என்பதை விளக்க இவ்வுவமை பயன்படுத்தப்பட்டுள்ளது. அய்யன் திருவள்ளுவனும் மழையின் சிறப்பை கூறும் போது

**"நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு" (திரு.வா.சி.20)**

என இவ்வுவமையை எடுத்தாளுகிறார்.

**விகுதிகள்**

சொல்லின் இனத்தைக் கண்டறிய விகுதிகள் இன்றியமையாதன. விகுதிகள் திணைஇ பால்இ எண்இ இடம் ஆகியவற்றைக் காட்ட வல்லன. இவ்விகுதிகளால் கட்டுண்ட சொற்களே தொடரில் பொருளை உணர்த்துகின்றன. ஆவ்வாறே இந்நற்றிணைப் பாடலிலும். விகுதிகள் தலைவியின் உயர்ந்த நட்பை உணர்த்துகின்றன. தலைவி தலைவனின் குணநலன்களைக் கூறும் போது உயர்திணைப் படர்க்கை விகுதிகளையே பயன்படுத்துகிறாள். 'நின்றசொல்லர்'இ 'நீடுதொன்றினியர்'இ 'பிரிபறியலரே'இ 'செய்பறியலரே' என்னும் தலைவனைச் சுட்டும் சொற்கள் உயர்திணை படர்க்கை விகுதியான அர் விகுதியைப் பெற்றுள்ளன. இதையே

**"அர் ஆர் ப என வரூம் மூன்றும்**
**பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே" ( தொல்.சொல்.வினை.11)**

என தொல்காப்பியர் உயர்திணைப் படர்க்கை விகுதிகளைப் பட்டியலிகிறார். தலைவி அர் விகுதிப் பெற்ற சொற்களைப் பயன்படுத்துவது தலைவன் மீதுள்ள அளவற்ற காதலையும் மரியாதையையும் நமக்குப் புலப்படுத்துகிறது.

**பொருட்புலப்பாடு**

அக இலக்கியங்கள் பேசும் கைக்கோள் கற்பும் களவும் ஆகும். நிலமும் பொழுதும் முதற் பொருளாகும். மக்களுடைய ஒழுக்கங்கள் உரிப்பொருளாகும். தெய்வம் முதலிய கூறுகள் கருப்பொருளாகும். குறியீடுகள் யாவும் கருப்பொருள்களை கொண்டே அகப்பாடல்களில் அமைக்கப்பட்டுள்ளன. இக்கருப்பொருள்களை

**"தெய்வம் உணாவே மா மரம் புள்பறை**
**சேய்தி யாழின் பகுதியோடு தொகைஇ**
**இவ்வகை பிறவுங் கருவென மொழிப" (தொல்.பொரு.அக.11)**

எனத் தொல்காப்பியர் பட்டியலிடுகிறார். அவ்வகையில் நோக்குகையில் மேற்காணும் நற்றிணைப்பாடலில் தலைவனது உள்ளத்திற்கு தாமரை மலரின் தாதுவினையும் தலைவியினது உள்ளத்திற்கு சந்தன மரத்தின் தாதுவினையும் இவர்களது காதலுக்கு தேனையும் குறியீடாக காட்டப்பட்டுள்ளது. இக்குறியீடுகளே (தாமரைத் தாதுஇ சந்தனத் தாதுஇ தேன்) பொருட்புலட்பாட்டுச் சொற்களாக இப்பாடலில் இடம் பெற்றுள்ளன. திணை மயக்கம் இப்பாடலில் இடம் பெற்றுள்ளது. தாமரை – மருதநிலத்து மலராகும்இ "பூஇ தாமரையுங் கழுநீரும் என நச்சினார்க்கியர் கூறுகிறார்". ஆகவே இக் கருப்பொருள் திணை மயக்கம் ஆகும். இதையே

**"உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே" ( தொல்.பொரு.அக.15)**

எனத் தொல்காப்பியர் இலக்கணம் பகருகிறார். சந்தனமரம்இ தேன் - அவ்விரண்டும் குறிஞ்சிநில கருப்பொருளாகும். "மரம் அகிலும் ஆரமுந் திமிசும; வேங்கையும்; செய்தி, தேன் அழித்தலுங் கிழங்கு அகழ்தலுங் தினைமுதலின விளைவித்தலுங் கிளிகடிதலும்" என நச்சினார்க்கினியார் உரை பகருகிறார். கற்பொழுக்கத்தில் நிகழ்ந்த 'இயற்கைப் புணர்ச்சியை' இப்பாடல் பேசுகிறது. உரிப் பொருள்களாக தொல்காப்பியர்,

**"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் இவற்றின் நிமித்தம் என்று இவை**
**தேருங்காலை திணைக்குஉரிப் பொருளே" (தொல்.பொரு.அக.16)**

என சுட்டுகிறார். குறிஞ்சித் திணையின் உரிப்பொருள் "புணர்தலும் புணர்தலின் நிமித்தமும்" ஆகும். இவ்வுரிப்பொருளே இப்பாடலில் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

**இலக்கணக் குறிப்பு**

தமிழுலகிற்கு கிடைத்த முதல் நூலான தொல்காப்பியம் தமிழிலக்கணத்தை எழுத்து சொல்இ பொருள் என மூன்றாக பகுக்கிறது. இவற்றுள் எழுத்தும் சொல்லும் மொழி கட்டமைப்பைப் பற்றியே பேசுகின்றன. இவற்றுள் சொற்களைப் பற்றி ஆராயும் பகுதி சொல்லதிகாரம் ஆகும். தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் உரையிலிருந்து தோன்றி **நூல்** நன்னூலாகும். இந்நூல் தற்கால வழக்கிற்கு இலக்கணம் பகருகின்றது. அவ்வாறே நோக்குகையில் இந்நற்றினைப்பாடலில் உள்ள சொற்கள்

**நின்ற சொல்லர்இ நீடு தோன்றினியர் -வினையால் அனையும் பெயர்**

**மீமிசைச் சாந்து – இருபெயரொட்டுப் பண்புத் தொகை**

**பசத்தல் - தொழிற் பெயர்**

**சிறுமை – பண்பு பெயர்**

**நறுநுதல் - உம்மைத் தொகை.**

**அருளிஇஅஞ்சி- வினையெச்சம்**

ஆகிய இலக்கண முறைகளோடு கட்டமைக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை**

கபிலர் இயற்றிய இவ்வகப்பாடல் குறிஞ்சித்தினையைச் சார்ந்ததாகும். கைக்கோள் கற்பொழுக்கமாகும். களவெழுக்கத்தில் இயற்கைப்புணர்ச்சி அப்பாடலில் சிறப்பிக்கப்படுகிறது. தலைவனின் பிரிவை உணர்த்திய தோழிக்க்கு தலைவி மொழிவதாக இப்பாடல் அமைக்கப்பட்டுள்ளது. மையக்கருத்தானது தலைவன் வாய்மை உடையவர்: சிறந்த குணநலன்களை உடையவர்: எனது தோளினை பிரிய விரும்பாதவர் இயற்கைப் புணர்ச்சியில் என்னைப்பிரிய மாட்டேன் என உறுதியளித்துள்ளார். ஆகவே என்னைப்பிரிந்தால் பசலையுற்று வாடுவேன் என்பது ஆகும். தலை மக்களுக்கு தாமரைத் தாதுவும் சந்தன மரத்தின் தாதுவும் அவர்களது உயர்நத நட்பிற்கு தேனும் உவமையாக காட்டப்பட்டுள்ளது. தலைவி தலைவனை உயர்திணைப் படர்க்கையில் விளிக்கிறாள். பொருட்புலங்களாக தாமரை, சந்தனமரம், தேன் ஆகியவை இலக்கிய சுவைக்கு மெருகேற்றியுள்ளன. குறிஞ்சித் திணை உரிப்பொருளான **புணர்தலும் புணர்தலின் நிமித்தமும்** இப்பாடலில் சிறப்பிக்கப்பட்டுள்ளது. பகுப்பு முறையிலே இந்நற்றிணைப்பாடலின் உள்ளடக்க நுட்பங்கள் இக் கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்**

1. ஔவை துரைசாமிப்பிள்ளை.சு இ நற்றிணை மூலமும் விளக்கவுரையும்இ பாகம்-1. தமிழ் வளர்ச்சி இயக்கம்இவெளியீடு,2024.
2. நச்சினார்க்கினியார் உரை, தொல்காப்பியம்,கௌரா பதிப்பகம், நான்காம் பதிப்பு.2013.
3. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர். நற்றிணை மூலமும் உரையும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-18, முதற்பதிப்பு,1952.
4. வித்வான் வேங்கடராமன். த, பதிப்பாசிரியர், நற்றிணை மூலமும் உரையும், டாக்டர் உ.சே.சா. நூல் நிலையம், நான்காம் பதிப்பு,2019.

**உரிமம்**

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.

**Copyright Holder:**
© Author(s) (2026).

**First Publication Right:**
© Tamilmanam International Research Journal of Tamil Studies

**This article is under:**

Tamilmanam